# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.159/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 9 |
| Name | : டாக்டர். கார்த்திகேயன் |
| Father/Husband's Name | : நாராயணன் |
| Village | : செங்கல்பட்டு அரசு மருத்துவமனை |
| Taluk | : செங்கல்பட்டு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.11.2024.

Accused absent. Petition filed and allowed.

**முதல் விசாரணை–**

நான் தற்போது செங்கல்பட்டு அரசு மருத்துவ கல்லூரியில் சட்டம் சார்ந்த மருததுவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.01.2023 அன்று அதே துறையில் பணியிலிருந்த போது பாலூர் காவல் நிலைய காவல் ஆய்வாளரின் வேண்டுகோளுக்கிணங்க காவல் நிலைய குற்ற எண்.252/2022 என்ற வழக்கில் இறந்து போன சுமார் 32 வயது மதிக்கதக்க கலைவாணன் என்ற ஆண் பிரேதத்தை காவலர் திரு.பிரவின்ராஜ் அடையாளம் காட்டினார். அன்றைய தினம் பகல் 12.10 மணியளவில் பிரேத பரிசோதனையை துவக்கினேன். பிரேத விறைப்பு உடல் முழுவதும் காணப்பட்டது.

காயங்கள் 1) யூ வடிவிலான தையல் இடப்பட்ட காயம் 18x0.5 செ.மீ. அளவில் வலதுபக்க முன்தலையில் காணப்பட்டது.

2) வலது தொடையின் கீழ் 3ம் பகுதி வீங்கியும் குறைபாடுடன் காணப்பட்டது. அதை கூராய்வு செய்ததில் வலது தொடை எலும்பு கீழ் 3ம் பகுதி உடைந்தும் அதனை

சுற்றியுள்ள திசுக்களில் கருஞ்சிவப்பு நிற கன்றிய காயம் காணப்பட்டது.

3) செம்பழுப்பு நிற சிராய்ப்பு காயங்கள் 2x1.8 செ.மீ.அளவில் வலது கண்குழியில் வெளிப்புற பகுதியிலும், 0.5x0.6 செ.மீ. அளவில் வலது தோள்பட்டையின் முன்பகுதியிலும், 3 ஒ 1 செ.மீ. அளவில் வலது முழங்கையில் பின்பகுதியிலும், 0.8x0.6 செ.மீ. இடது கையின் பின்பகுதியிலும், மற்றும் 0.6x0.4 செ.மீ. அளவில் இடதுகாலின் உள்பகுதியிலும் காணப்பட்டது. வேறு எவ்வித வெளிப்புற காயங்கள் காணப்படவில்லை. தலையை கூராய்வு செய்ததில் கருஞ்சிவப்பு நிற கன்றிய காயம் 9x6–5 செ.மீ.x தலை தோல் ஆழத்திற்கு தலையின் வலது முன், மேல் மற்றும் வெளிப்புற பகுதியில் காணப்பட்டது. கோடுபோன்ற எலும்பு முறிவு 6.2 செ.மீ. அளவில் வலதுபக்க முன் எலும்பிலிருந்து வலது பக்க மேல் எலும்பு வரை நீண்டு காணப்பட்டது. மூளை முழுவதும் இரத்த கசிவு காணப்பட்டது. இறைப்பையில் சுமார் 60 மில்லி அளவிலான அடர்பழுப்பு நிற திரவம் காணப்பட்டது. அதில் எவ்வித குறிப்பிடும்படியான வாடையில்லை. நுரையீரல் இரண்டும் நீர் கோர்த்து காணப்பட்டது. மற்ற உள்ளுருப்புகள் அனைத்தும் நல்ல நிலையில் இருந்தது.

கருத்து – இறந்த நபர் அவருக்கு உண்டான தலை காயத்தின் விளைவால் இறந்துள்ளார்என கருதது தெரிவித்து சான்று வழங்கினேன். **(நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அதசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று கனமான பொருளின் மீது மோதினால் நான் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது. எனது பிரேத பரிசோதனை அறிக்கையில் எத்தனை மணி நேரத்திற்கு முன்பு இறப்பு ஏற்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 159/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW-10 |
| Name | : டாக்டர். திருவிக்ரமன் |
| Father/Husband's Name | : முத்து |
| Village | : செங்கல்பட்டு அரசு மருத்துவமனை |
| Taluk | : செங்கல்பட்டு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.11.2024.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.12.2022 அன்று மேற்படி பணியிலிருந்த போது பாலூர் இரயில்வே ஸ்டேசன் அருகில் நடந்த விபத்தில் காயமுற்ற திரு.கலைவாணன் த/பெ. சீனிவாசன் வயது 32, என்பவர் இரவு 11.30 மணியளவில் அறுவை சிகிச்சை பிரிவிற்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து வரப்பட்டார். எனது முன்னிலையில் அவரை பரிசோதித்த மருத்துவர் சதீஷ்ராஜன் என்பவர் அவருக்கு நாடிதுடிப்பு இல்லையென கண்டறிந்தார். அவரின் பிரேதத்தை சவக்கிடங்கிற்காக அனுப்பி வைத்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டில் மேற்படி நபர் இறந்து போனதாக குறிப்பிட்டு கூறியுள்ளாரா என்றால் இல்லை. மருத்துவர் சதீஷ்ராஜன் இறப்பினை

உறுதி செய்தது சம்மந்தமாக ஆவணத்தில் நான் கையொப்பம் மற்றும் சீல் செய்தேனா என்றால் இல்லை.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 159/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 11 |
| Name | : டாக்டர். சதீஷ்ராஜன் |
| Father/Husband's Name | : அப்பாதுரை |
| Village | :அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை |
| Taluk | : செங்கல்பட்டு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.11.2024.

Accused present.

**முதல் விசாரணை–**

**1)** நான் தற்போது செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி நிலைய மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.12.2022 அன்று மதியம் 02.40 மணிக்கு நான் பணியிலிருக்கும் போது கலைவாணன் என்பவர் அன்றைய தினம் இருசக்கர வாகனமும், லாரியும் மோதியதில் சுமார் 01.45 மணியளவில் பாலூர் இரயில்வே ஸ்டேசன் அருகில் ஏற்பட்ட விபத்தில் காயம் ஏற்பட்டதாக அவரது மனைவி அழைத்து வந்தார். அவரை பரிசோதனை செய்து பார்க்கையில் அவர் சுயநினைவு இன்றி காணப்பட்டார். அவருக்கு இடது பக்க தலையில் 10x1x1 செ.மீ. அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது. அவரது வலது பக்க தொடையில் வீக்க காயம் காணப்பட்டது. அவருக்கு விபத்து பதிவேடு பதியப்பட்டு உள்நோயாளியாக சேர்க்கப்பட்டார். **(அந்த விபத்து பதிவேடானது அதசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**வஎதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

விபத்து பதிவேட்டில் பொதுவாக காயத்தின் தன்மை, நிறம், வயது ஆகியவற்றை குறிப்பிட்டுள்ளேனா என்றால் தன்மை குறிப்பிட்டுள்ளேன் நிறம், வயது குறிப்பிடவில்லை. வயது குறிப்பிடும் வழக்கம் இல்லை.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 159/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 12 |
| Name | : Tr. Saravanan |
| Father/Husband's Name | : Gajendiran |
| Village | : No.298, Bajanai Koil Street |
| Taluk | : Melachery, Palur Post |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.11.2024.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது மேளச்சேரியில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 31.12.2022 அன்று நான் எனது பணியை முடித்துவிட்டு திரும்பி பாலூர் நோக்கி வரும் போது பாலூர் இரயில்வே ஸ்டேசன் பக்கத்தில் ஒரு பைக் மற்றும் லாரியும் மோதி விபத்து நடந்திருந்தது. பைக்கின் ஓட்டுநரான கலைவாணனுக்கு காலில் அடிப்பட்டு அவரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்து எழுதி கையொப்பம் வாங்கினார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லையென்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று கேட்டால் லாரியும், பைக்கும் விபத்தில் ஈடுபட்டிருந்ததாக எழுதியிருந்தார்கள். என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்று கேட்டால் விபத்து நடந்த இடத்தில். அப்போது எத்தனை பேர் அங்கிருந்தார்கள் என்று கேட்டால் சுமார் 15 பேர்.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.